NSW Health

# எனது செயற்கைப் பற்களைப் பெறும்போது நான் என்ன எதிர்பார்க்கலாம்?

What can I expect when I get my dentures?

Tamil

## உங்கள் வாய் உங்களின் புதிய செயற்கைப் பற்களுக்கு பழகுவதற்கு சிறிது காலம் ஆகலாம்.

### பின்வருவனவற்றை நீங்கள் கவனிக்கலாம்:

- உங்கள் வாயில் செயற்கைப் பற்கள் பருமனாக உணரலாம்
- உங்களுக்கு உமிழ்நீர் அதிகமாக இருக்கலாம்
- நீங்கள் சாப்பிடும்போது அல்லது பேசும்போது செயற்கைப் பற்கள் அசையலாம்
- மெல்லுவதும் கடிப்பதும் வித்தியாசமாக இருக்கலாம்
- உணவின் சுவை வித்தியாசமாக இருக்கலாம்
- பேசுவது வித்தியாசமாக இருக்கலாம்
- சில அசௌகரியங்கள் ஏற்படலாம், இது சாதாரணமானது

உங்களுக்கு தொடர்ந்து சிக்கல்கள் இருந்தால், பல் மருத்துவருடனான மறுஆய்வு சந்திப்பில் அவரிடம் கூறுங்கள்.

### எனது செயற்கைப் பற்கள் நீண்ட காலம் நீடிக்க வைப்பது எப்படி?

- சூடான நீரில் ஊற வைப்பது அல்லது சூடான காரில் வைத்திருக்க வேண்டாம்.
- உங்கள் செயற்கைப் பற்களில் ப்ளீச் போன்ற இரசாயனங்களைப் பயன்படுத்த வேண்டாம்.
- உங்கள் செயற்கைப் பற்களை சரிசெய்யவோ, மாற்றவோ அல்லது பழுது பார்க்கவோ முயற்சிக்காதீர்கள் அல்லது அவற்றை சரிசெய்ய பசை பயன்படுத்த வேண்டாம் - உங்கள் பல் மருத்துவரைப் பார்க்கவும்.
- நீங்கள் தூங்கும்போது அல்லது தொடர்பு விளையாட்டு விளையாடும்போது உங்கள் செயற்கைப் பற்களை கழற்றி வையுங்கள்.
- உங்கள் செயற்கைப் பற்களை மிகுந்த கவனத்துடன் கையாளுங்கள். நீங்கள் அவற்றை தவறி கீழே போட்டுவிட்டால், அவை உடைந்துவிடும்!

### எனது வாயை நான் எப்படி பராமரிப்பது?

- உணவுக்குப் பிறகு, உங்கள் வாயையும், செயற்கைப் பற்களையும் தண்ணீரில் கழுவ வேண்டும், இது பற்களில் உணவு பிடிமானம் உருவாவதைத் தவிர்க்க உதவும்.
- செயற்கைப் பற்களுக்கான பசை/பிசின் பயன்படுத்தினால், உங்கள் வாயிலிருந்து எஞ்சியிருக்கும் எச்சங்களை அகற்றுவதை உறுதிசெய்யவும்.
- உங்கள் வாயில் சில செயற்கைப் பற்கள் இருந்தால், எஞ்சியிருக்கும் இயற்கையான பற்களை ஒரு நாளைக்கு இரண்டு முறை ஃவுளூரைடு பற்பசை மூலம் துலக்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### நான் எப்போது பல் மருத்துவரைப் பார்க்க வேண்டும்?

- உங்கள் செயற்கைப் பற்களை சரிசெய்ய வேண்டி இருக்கும் போது அதனை சரியாகப் பொருந்துவதற்கு சில முறை பல் மருத்துவரை பார்க்க வேண்டியத் தேவை இருந்தால்.
- உங்கள் செயற்கைப் பற்கள் உடைந்தால்

© NSW Ministry of Health. July 2024

- உங்களுக்கு கடுமையான வலி இருந்தால், உங்கள் செயற்கைப் பற்களை கழற்றி விடுங்கள், **ஆனால்** உங்கள் மருத்துவ மறுஆய்வு சந்திப்பின் காலையில் அவற்றை அணிய வேண்டும்.
- உங்கள் உதடுகளின் மூலையில் வலியுடன், சிவப்பு விரிசல் இருந்து, அது மறையாமல் இருந்தால்.
- உங்களுக்கு புண் அல்லது எரிச்சலுடனான, சிவப்பான/புதிய காயத்துடனான பகுதிகள் அல்லது வெள்ளைத் திட்டுகள் இருந்தால் (உங்களுக்கு வாய்ப்புண் இருக்கலாம்).
- உங்கள் செயற்கைப் பற்கள் பொருத்தப்பட்டுள்ள இடத்தில் சிவப்புத் திட்டுகள் அல்லது புண் பகுதிகள் இருந்தால்.
- உங்கள் வாயில் 2 வாரங்களுக்குள் குணமடையாத ஏதேனும் புண்கள் இருந்தால்.

## செயற்கைப் பற்களின் பராமரிப்பு

- காலையிலும் இரவிலும் உங்கள் செயற்கைப் பற்களை சுத்தம் செய்யுங்கள்.
- கீழே விழுந்தால் உடைந்துபோகும் அபாயத்தைக் குறைக்க சுத்தம் செய்யும் போது தண்ணீர் நிரப்பிய தொட்டி அல்லது துண்டின் மேல் செய்யுங்கள்.
- மிதமான திரவ சோப்பு கொண்டு மென்மையான இதழ்கள் கொண்ட பற்தூரிகையை பயன்படுத்தவும்.
- செயற்கைப் பற்களை சுத்தம் செய்ய பற்பசையை பயன்படுத்த வேண்டாம்
- உங்கள் செயற்கைப் பற்களின் அனைத்து பகுதிகளையும் நன்கு துலக்கவும். குளிர்ந்த நீரில் கழுவவும்.
- காலையிலும் இரவிலும் மென்மையான பற்தூரிகை மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி உங்கள் ஈறுகள் மற்றும் நாக்கை சுத்தம் செய்யவும்.
- இரவில் உறங்கச் செல்வதற்கு முன் செயற்கைப் பற்களை கழற்றி விடவும். சுத்தம் செய்யப்பட்ட உங்கள் செயற்கைப் பற்களை இரவு முழுவதும் உலர்ந்த கொள்கலனில் வைக்கவும்.

## என்ன சாப்பிட வேண்டும்?

- முட்டை, தயிர், மீன் மற்றும் சமைத்த காய்கறிகள் போன்ற மென்மையான உணவுகளை முதலில் சாப்பிட்டு, பின்னர் மெதுவாக உங்கள் இயல்பான ஆரோக்கியமான உணவுக்கு திரும்புவது சிறந்தது என்பதை உணர்வீர்கள்.
- நீங்கள் முதலில் உங்கள் செயற்கைப் பற்களைப் பெறும்போது நீங்கள் தவிர்க்க வேண்டிய சில உணவுகள் உள்ளன. இதில் சோளக்கதிர் மற்றும் கொட்டைகள் அடங்கும்.
- உதவக்கூடிய சில குறிப்புகள் இங்கே உள்ளன:
- சூடான உணவுகளை உண்ணும் போது கவனமாக இருங்கள், ஏனெனில் செயற்கைப் பற்கள் உள்ளதினால் சூடான உணவுகள் மற்றும் பானங்கள் உண்மையில் எப்படி இருக்கும் என்பதைக் உணர்வது கடினமாக இருக்கலாம்.
- உங்கள் உணவை சிறிய துண்டுகளாக வெட்டிக்கொள்ளுங்கள்.
- உங்கள் செயற்கைப் பற்களின் இருபுறமும் மெல்லுங்கள்.
- சிறிய விதைகளில் கவனமாக இருங்கள். இவை உங்கள் செயற்கைப் பற்களின் கீழ் சிக்கி அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

## NSW-இல் உள்ள பல் மருத்துவ சேவைகள்

**NSW அரச பல் மருத்துவ சேவைகள்** மெடிக்கர் வைத்துள்ள 18 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பொதுவான மற்றும் அவசர பல் பராமரிப்புகளை இலவசமாக வழங்குகிறது. பின்வரும் ஆஸ்திரேலிய அரசாங்க சலுகை அட்டைகளில் ஒன்றைக் கொண்ட பெரியவர்களுக்கு அரச பல் மருத்துவ சேவைகள் இலவசம்:

- ஓய்வூதியதாரர் சலுகை அட்டை
- சுகாதார அட்டை (Health Care Card)
- காமன்வெல்த் மூத்தோர் சுகாதார அட்டை

அரச பல் மருத்துவ சேவையுடன் பல் மருத்துவ சந்திப்பிற்கான முன்பதிவு செய்ய, அழைக்கவும்: 1800 679 336.

அவர்கள் உங்கள் மெடிக்கர் அட்டை விவரங்களைக் கேட்பார்கள். நீங்கள் வயது வந்தவராக இருந்தால், உங்களின் சலுகை அட்டை விவரங்களும் உங்களுக்குத் தேவைப்படும்.

ஒரு **தனியார் பல் மருத்துவரைக்** கண்டுபிடிக்க, ஆஸ்திரேலிய பல் மருத்துவ சங்கம் - பல் மருத்துவரைக் கண்டுபிடி என்ற இணையப்பக்கத்திற்கு செல்லவும் https://www.adansw.com.au/Community/FindaDentist

© NSW Ministry of Health. July 2024